செ.வெ.எண்: 70 நாள்: 25.11.2016

# புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள குழந்தைகளின் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் அலுவலர்கள் சிறப்பாக செயலாற்ற வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் சமூக பாதுகாப்புத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்புத்திட்டம், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு சார்பில் மாவட்ட ஆலோசனை மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு குழுக் கூட்டம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முனைவர்.ஜெ.லோகநாதன்,இ.கா.ப., அவர்கள் முன்னிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 24.11.2016 அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சமூகப்பாதுகாப்புத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி தமிழகஅரசு குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் பாதுகாப்புக்குழுக்கூட்டம் நடத்த உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் மாவட்ட ஆலோசனை மற்றும் குழந்தைகள் பாதுகாப்புக்குழுக்கூட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் குழந்தைகள் இல்லப்பதிவு, ஆதார் எண் பெறுதல், அரசு குழந்தைகள் காப்பகம் மற்றும் காப்பகத்திற்கு தண்ணீர் தேவையை பூர்த்தி செய்தல், சட்ட விரோத குழந்தை தத்தெடுத்தலை தடுத்தல், வட்டார மற்றும் கிராம அளவிலான குழந்தைகள் பாதுகாப்புக்குழுக்கூட்டம், விழிப்புணர்வு கண்காட்சி அரங்கு அமைத்தல், குழந்தை திருமணத்தை தடுத்தல், விழிப்புணர்வை ஏற்படுத்துதல், தத்து நிறுவனம் மற்றும் வரவேற்பு இல்லம் போன்ற பல்வேறு விபரங்கள் குறித்து விளக்கமாக கேட்டறியப்பட்டது.

மேலும் மாவட்டத்தில் செயல்பட்டு வருகின்ற குழந்தைகள் இல்லங்கள், இளைஞர் நீதிச்சட்டம் 2015 பிரிவு 41ன் கீழ் பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டதை தொடர்ந்து தகுதியுடைய நிறுவனங்களுக்கு உரிய சான்றிதழ்களை சரிபார்த்து வழங்கவும், குழந்தைகள் இல்லங்களில் தங்கியுள்ள குழந்தைகளுக்கு அந்தந்த வட்டாரங்களில் ஆதார் எண்ணினை பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளவும், குழந்தைகளின் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் வட்டார மற்றும் கிராம அளவில் பாதுகாப்புக்குழுக்கூட்டம் கூட்டவும், பொதுமக்களிடம் குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு, சட்டங்கள் குறித்து விழிப்புணர்வு துண்டு பிரசுரம் வழங்கவும், ஒலிப்பெருக்கி மூலம் விளம்பரம் செய்யவும், இதன் மூலம் நமது மாவட்டத்திலுள்ள குழந்தைகளின் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் உரிய நடவடிக்கை மேற்கொண்டு சிறப்பாக செயலாற்ற சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, புதுக்கோட்டை சார் ஆட்சியர் திரு.எஸ்.பி.அம்ரித்,இ.ஆ.ப., மாவட்ட சமூகநல அலுவலர் திருமதி.ரேணுகா, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திரு.இளையராஜா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**